புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூலை 20, 2023 • புரட்சி 23 • முழக்கம் 27 • விலை ரூ.3.00

# தெருமுனைக் கூட்டங்கள் வெற்றிநடை; மக்கள் பேராதரவு

**சென்னை, சேலம், ஈரோடு, தஞ்சை மாவட்டங்களில் – கழகத்தின் தெருமுனைக் கூட்டங்கள் ஒவ்வொரு நாளும் சிறப்பாக – மக்கள் ஆதரவுடன் நடந்து வருகிறது.**

**சென்னை :** எது திராவிடம்? எது சனாதனம்? முதல் தெருமுனைக் கூட்டம், ஜூலை 10, மாலை 5 மணிக்கு மடிப்பாக்கத்தில் நடைப்பெற்றது. பாடகர் ஜெய்பீம் அறிவுமானன் பகுத்தறிவு பாடல்களை பாடினார், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, எட்வின் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இரண்டாவது கூட்டம் கீழ்க்கட்டளை பெரிய தெருவில் மாலை 7 மணிக்கு தொடங்கி நடைப்பெற்றது. பாடகர் ஜெய்பீம் அறிவுமானன் பகுத்தறிவு பாடல்களை பாடினார், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, சேத்துப்பட்டு இராசேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மூன்றாவது கூட்டம் 11.07.2023 அன்று மாலை 5 மணிக்கு நங்கநல்லூரில் எட்வின் பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கமாக பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் இரா.உமாபதி, இரண்யா ஆகியோர் பறை இசைக்க கூட்டம் தொடங்கியது. மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, எட்வின் பிரபாகரன், அன்னூர் விஷ்ணு ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சி முடிந்த பிறகு அங்குள்ள தலைவர் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

நான்காவது கூட்டம் மடிப்பாக்கம் கூட் ரோட்டில் மாலை 7 மணிக்கு தொடங்கி நடைப்பெற்றது. கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரு.உமாபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர்கள் கடைவீதி வசூலில் ஈடுபட்டதை பார்த்த மாணவி ஒருவர், அவரது தாயுடன் வந்து ரூ.100 நன்கொடையளித்து தோழர்களை ஊக்கப்படுத்தினார்கள். இது தோழர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

ஐந்தாவது தெருமுனைக் கூட்டம் 12/07/2023 அன்று ஆதம்பாக்கம் - நங்கநல்லூர் ஆகிய இரண்டு இடங்களில் நடைபெற்றது. புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஆதம்பாக்கத்தில் நிகழ்வு தொடங்கியது. காங்கிரஸ் நிர்வாகி நேரு ரோஜா, திமுக முன்னாள் கவுன்சிலர் ஆதம் கு. விஜயன், லயோலா பிரான்ஸிஸ் ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் , மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து ஆறாவது கூட்டம் மாலை 7 மணிக்கு நங்கநல்லூர் 48வது தெருவில் ஜெய்பீம் அறிவுமானனின் பகுத்தறிவு பாடல்களோடு நிகழ்வு தொடங்கியது. தோழர்கள் ஜெயபிரகாஷ், அருண்கோமதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விசிக விக்னேஷ், பிறைசூடன் ஆகியோரும், அமைப்பு சாரா தோழர்களான ராபின், திரிசூலம் கலைச்செல்வன், பெரும்பாக்கம் ஜெய்ராம் ஆகியோரும் நிகழ்ச்சியை வெகுவாகப் பாராட்டினர்.

மாவட்டத் தலைவர் வேலவேந்தன், மயிலை ராவணன், ம. கி. எட்வின் பிரபாகரன், இரண்யா, ராஜேஷ், கோபி, மயிலை அருண், அசோக், ப்ரீத்தி, அகராதி உள்ளிட்டோர் துண்டறிக்கை பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ராயப்பேட்டை அருண், ஆட்டோ அருண், காவை அஜித், சூர்யா, வீரா, உதயா, மஞ்சுநாதன் ஆகிய தோழர்கள் சிறப்பான களப்பணியில் ஈடுபட்டனர்.

ஏஞ்சல் தையலக உரிமையாளரும் பெரியாரியலாளருமான பிரபு, தானாக முன்வந்து தேநீர் வழங்கினார். கடை உரிமையாளர்கள் நன்கொடையாக 4,280 வழங்கினர்..

ஏழாவது கூட்டம் 13.07.2023 மாலை 5 மணிக்கு வேளச்சேரி காமராசர் சாலையில் பாடகர் ஜெய்பீம் அறிவுமானனின் பகுத்தறிவு பாடல்களுடன் தொடங்கியது. மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, எட்வின் பிரபாகரன் சிறப்புரையாற்றினார்கள்.

எட்டாவது கூட்டம் மாலை 7 மணிக்கு வேளச்சேரி நூறடி சாலை பாரத் பெட்ரோலியம் பங்க் அருகில் தொடங்கி நடைப்பெற்றது. கழகத் தோழர் ஈரோடு பேரன்பு பெரியார் மற்றும் இட ஒதுக்கீடு பற்றிய ராப் பாடலை பாடினார், இது பார்வையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

பின்னர் தோழர் நாத்திகன் தொடக்கவுரையாற்ற, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தை இளைஞர்கள், உழைக்கும் மக்கள் பலரும் ஆர்வத்துடன் பார்த்து கருத்துக்களை கேட்டறிந்தனர்.

ஒன்பதாவது கூட்டம் 14.07.2023 மாலை 5 மணிக்கு ஆதம்பாக்கம் பகுதியில் கூட்டம் நடைப்பெற்றது. பாடகர் ஜெய்பீம் அறிவுமானனின் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், சேத்துப்பட்டு இராசேந்திரன், அருண்கோமதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பத்தாவது கூட்டம் மாலை 7 மணிக்கு ஆதம்பாக்கம் மோகனாம்புரி முதல் தெருவில் நடைபெற்றது. ஜெய்பீம் அறிவுமானன் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார், பலகுரல் மன்னன் அய்யா காண்டீபன் நடிகவேள் எம்.ஆர். இராதா குரலில் சமகால அரசியலை பேசி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் ரவி பாரதி, தோழர்கள் குகன், தேன்மொழி உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சி முடிவில் தி.மு.கழக நிர்வாகிகள் சுப்புராஜ், மணிகண்டன், கண்ணன் ஆகியோர் தெருமுனைக் கூட்டத்தைப் பாராட்டி தோழர்களுக்கு பயனாடை அணிவித்தனர்.

வேளச்சேரி, மடிப்பாக்கம் பகுதிகளில் நடைப்பெற்ற 10 தெருமுனைக் கூட்டங்களை இரண்யா, எட்வின் பிரபாகரன் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர். - **(ஏனைய பகுதிகளின் செய்தி அடுத்த இதழில்)**

**சேலம் மேற்கு :** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தொடக்க கூட்டம் 12.07.2023 புதன் காலை 10 மணிக்கு குஞ்சாண்டியூரிலும், இரண்டாவது கூட்டம் மாலை 4 மணிக்கு மேச்சேரி பேருந்து நிலையத்திலும் நங்கவள்ளி கிளைக் கழகத்தின் சார்பில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழக பேச்சாளரும் சேலம் மேற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவருமாகிய கோனூர் வைரமணி, திவிக நங்கவள்ளி நகர செயலாளர் சு.பிரபாகரன் தலைமையேற்று நடத்தினர். சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தின் முதல் நிகழ்வாக பகுத்தறிவு பாடல்களையும் நமது இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளையும் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் மக்களுக்கு எடுத்துரைத்தார். அதைத்தொடர்ந்து தொடக்க உரையாக கழகத்தின் தலைமை குழு உறுப்பினர் காவை ஈசுவரன் எது சனாதனம்? எது திராவிடம்? எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கோனூர் வைரமணி திமுக தலைமைக் கழக பேச்சாளர் மற்றும் சேலம் மேற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர், கிருஷ்ணன் CPI, ந.செல்வம் தமிழ்நாடு மாணவர் கழகம், ப.செல்வகுமார் தமிழ்நாடு மாணவர் கழகம், கிருஷ்ணன் விசிக ஒன்றிய செயலாளர் மேச்சேரி கலந்து கொண்டு எது திராவிடம்? எது சனாதனம்? என்பதை மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

கிருஷ்ணன் நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்து சென்றார். இறுதியாக கவியரசு நன்றி கூறி கூட்டம் நிறைவடைந்தது.

சேலம் மாநகரத்தின் இரண்டாவது தெருமுனை கூட்டம் தாதகாபட்டியில் உள்ள அருணாசலம் மெயின் ரோட்டில் 13-07-2023 அன்று மாலை 6.30 மணிக்கு தொடங்கி இரவு 9.50 வரை சிறப்பாக நடந்து முடிந்தது.

இக்கூட்டத்திற்கு சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் தலைமையேற்று நடத்தினார். மாநகர ராஜசேகர் வரவேற்புரையாற்றினார். கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை முன்னிலை வகித்தார். கூட்டத்தின் முதல் நிகழ்வாக பெரியார் பிஞ்சு சுதர்சன் பெரியாரின் பொன்மொழியை வசித்து கூட்டத்தை துவக்கி வைத்தார். யாழினி பெரியார் பாடல்கள் பாடினார். ஆத்தூர் மகேந்திரன் மந்திரமா? தந்திரமா? நிகழ்வை நடத்தினார்.

அதைத்தொடர்ந்து மாநகரச் செயலாளர் ஆனந்தி எது சனாதனம்? எது திராவிடம்? எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். பிரபு மற்றும் பாலமுருகன் ஆகியோர் கலைநிகழ்ச்சி ஒன்றை நடத்தி திராவிடம் மக்களுக்கு

தொடர்ச்சி 4–வது பக்கம்

## கழகக் கூட்டங்கள் முரசொலி ஏடு பாராட்டுகிறது!


கொள்கைப் பாய்ச்சல்!

**சமூகநீதிப் போராட்டங்கள் பெற்றுத்தந்த உரிமைகள், நமது தமிழ்நாட்டை முன்னேறிய மாநிலமாக மாற்றியுள்ளது. திராவிடக் கொள்கைகளே நமது மாற்றங்கள், கட்டமைப்புகள் அனைத்துக்கும் காரணமாக உள்ளன. இந்த நிலையில் தான் வல்லூறுகள் போல நம்மைச் சூழ்ந்துகொள்ள துடிக்கின்றன வகுப்புவாத அரசியல் சக்திகள்.**

**சனாதனத்தை விரட்டி சமூகநீதி காத்த திராவிட நிலத்தில் மீண்டும் சனாதனத்தை நிறுவ விரும்புகின்றனர். முயற்சி செய்கின்றனர். அதற்காக பல மட்டங்களில் அரசியல் செய்து வருகின்றனர். கிடைக்கும் மேடைகளில் சனாதன கருத்துக்கு ஆதரவாக பேசி, மக்களை திசை திருப்புகின்றனர். இந்த வேளையில் திராவிடர் விடுதலைக் கழகம் எது திராவிடம்? எது சனாதனம்? என நடத்தும் தெருமுனைக் கூட்டம் நடத்தி வருகிறது. சென்னையில் 200 இடங்களில் நடத்த திட்டமிட்டு, அதற்கான பிரச்சார வாகனத்தையும் வடிவமைத்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் இந்த கூட்டங்கள் நடைபெற உள்ளன.**

**தேர்தல் காலம் நெருங்கி வருவதால் முன் எப்போதை விடவும் வகுப்புவாத சக்திகளும் சாதிய சக்திகளும் தமிழ்நாட்டைச் சூழ்ந்து நாளொருவண்ணம் குழப்பங்களை உருவாக்கி வருகின்றன. இந்த நிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் இந்த முயற்சி மக்கள் மனதில் கொள்கையை பாய்ச்சும், சிறந்த பாய்ச்சல்!**

# அமலாக்கத்துறையா? ஆளும்கட்சி எடுபிடியா?

**ர. பிரகாசு**

அமலாக்கத்துறை இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதவிக்காலத்தை நீட்டித்தது சட்ட விரோதம், வரும் ஜூலை 31ஆம் தேதியோடு அவரை பணியில் இருந்து விடுவிக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் எதிர்க்கட்சிகளை பழிவாங்க மிக முக்கிய கேடயமாக அமலாக்கத்துறையை பயன்படுத்தி வந்த பாஜகவிற்கு இத்தீர்ப்பு பேரதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

1984-ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய வருவாய்த்துறை அதிகாரி சஞ்சய் குமார் மிஸ்ரா. உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவரான இவரை, 2018ஆம் ஆண்டில் அமலாக்கத்துறை இயக்குநராக ஒன்றிய பாஜக அரசு நியமித்தது. 2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே இவருடைய பதவிக்காலம் முடிவுற்ற நிலையில், ஒன்றிய அரசால் மேலும் ஒரு ஆண்டுக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. மீண்டும் 2021-ஆம் ஆண்டில் ஒரு முறையும், 2022-ஆம் ஆண்டில் ஒருமுறையும் என தொடர்ந்து பணி நீட்டிப்பு கொடுத்துக்கொண்டே இருந்தது ஒன்றிய அரசு.

2020-ஆம் ஆண்டு மே மாதத்திலேயே 60 வயதை நிறைவு செய்த சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு இத்தனை முறை பணி நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? வேறு தகுதியுள்ள நபர் ஒருவர் கூட கிடைக்கவில்லையா என்ற கேள்விகள் எழத் தொடங்கின. சஞ்சய் குமார் மிஸ்ராவின் பணி நீட்டிப்புக்கு எதிராக காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகள் வழக்கு தொடர்ந்தன.

ஓய்வுக்குப் பிறகு வழங்கப்படும் பணி நீட்டிப்பு குறுகிய காலத்திற்கு மட்டுமே இருக்க வேண்டுமென்றும், இன்னொரு முறை சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு பணி நீட்டிப்பு வழங்கப்படக்கூடாது என்றும் 2021-ஆம் ஆண்டிலேயே உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. உச்சநீதிமன்றம் தெள்ளத்தெளிவாக இப்படியொரு தீர்ப்பை வழங்கிய பின்பும்கூட 2022-ஆம் ஆண்டில் சஞ்சய் குமார் மிஸ்ரா அமலாக்கத்துறை இயக்குநராக மீண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டார்.

இதைக்கண்டு அதிருப்தி அடைந்த உச்சநீதிமன்றம், ஜூலை 11-ஆம் தேதி ஒரு மிக முக்கியத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. சஞ்சய் குமார் மிஸ்ராவின் பணி நீட்டிப்பு சட்டவிரோதம், ஜூலை 31-ஆம் தேதிக்குள் புதிதாக ஒருவரை அமலாக்கத்துறை இயக்குநராக நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. சஞ்சய் குமார் மிஸ்ராவை விட்டால், வேறு ஆள் கிடைக்கவில்லையா என்றும் நீதிபதிகள் ஒன்றிய அரசை நோக்கி காட்டமான கேள்விகளை எழுப்பினர்.

வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை பொம்மைகளாக மாற்றி, எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதற்காகவே மட்டுமேஒன்றிய அரசுபயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்பது இந்தியாவில் இருக்கிற ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள், சனநாயகவாதிகள் முன்வைக்கிற பரவலான குற்றச்சாட்டு. இந்த குற்றச்சாட்டுக்கு வலு சேர்க்கிற விதமாக சஞ்சய் மிஸ்ராவின் பணி நீட்டிப்பு நடவடிக்கை இருந்து வந்தது. உச்சநீதிமன்றத் தீர்ப்பும் அதை உறுதிப்படுத்தும் விதமாகவே இருக்கிறது.

நாட்டில் நிலவும் வேலையின்மை, மக்களைப் பிளவுபடுத்தும் ஜாதிய- மதவாத மோதல்கள், சகிப்புத்தன்மைக்கு எதிரான அவலங்கள் போன்ற முக்கியப் பிரச்னைகள் எவற்றுக்கும் பதில் கொடுக்காத உள்துறை அமைச்சர் அமித் ஷா, அமலாக்கத்துறை இயக்குநராக சஞ்சய் குமார் மிஸ்ரா தொடரக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கொடுத்த தீர்ப்புக்கு மட்டும் வேக வேகமாக அன்றே பதில் கொடுத்தார். இந்தத் தீர்ப்பு தொடர்பாக டிவிட்டரில் பதிவிட்ட அமித் ஷா, “அமலாக்கத்துறை இயக்குநராக யார் இருக்கிறார்கள் என்பது முக்கியமில்லை, அமலாக்கத்துறையின் பணி என்னவென்பதுதான் முக்கியம். அமலாக்கத்துறை எந்தவொரு தனி நபருக்கும் அப்பாற்பட்ட அமைப்பு. பணமோசடி, அந்நிய செலாவணி சட்டங்களை மீறுதல் போன்ற குற்றங்களை விசாரிப்பதுதான் அந்த அமைப்பின் பணி” என்றெல்லாம் விளக்கம் கொடுத்தார்.

அமலாக்கத்துறை இயக்குநராக யார் இருக்கிறார்கள் என்பது முக்கியமில்லை என்று அமித் ஷா சொல்வது சரியென்றால், ஏன் சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு இத்தனை முறை பணி நீட்டிப்பு கொடுத்து, அவரைத் தக்கவைக்க ஒன்றிய பாஜக அரசு விரும்புகிறது என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. ஏனெனில் 2018ஆம் ஆண்டு இவர் அமலாக்கத்துறை இயக்குநராக பொறுப்பேற்ற பின்னர், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டவர்கள் பட்டியலை மேலோட்டமாகப் பார்த்தாலே நமக்குத் தெளிவாகப் புரிந்துவிடும்.

இவருடைய 5 ஆண்டுகள் பதவிக் காலத்தில் மட்டும் 3,000-க்கும் அதிகமான வழக்குகளை அமலாக்கத்துறை பதிவு செய்திருக்கிறது. ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், கர்நாடக காங்கிரஸ் தலைவரும், துணை முதல்வருமான டி.கே. சிவகுமார், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், மகாராஷ்டிர முன்னாள் அமைச்சர்கள் அனில் தேஷ்முக்த், நவாப் மாலிக், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்கள் ஃபரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முஃப்தி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பார்த்த சட்டர்ஜி, தமிழ்நாட்டில் அமைச்சர் செந்தில்பாலாஜி, பொன்முடி உள்ளிட்ட பலர் இப்பட்டியலில் உள்ளனர்.





நேசனல் ஹெரால்டு வழக்கில் ராகுல் காந்திக்கு சம்மன் அனுப்பி 5 நாட்கள், சுமார் 42 மணி நேரம் அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது. சோனியா காந்தியிடம் 13 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. பிரியாங்கா காந்தியின் கணவர் ராபர்ட் வதேராவும் விசாரணையில் இருந்து தப்பவில்லை. ஆம் ஆத்மியைச் சேர்ந்த மணீஷ் சிசோடியா, சத்யேந்திர ஜெயின் இன்னமும் சிறையிலேயே உள்ளனர்.

பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் நேரடியாகவும், சில மாநிலங்களில் கூட்டணிக் கட்சிகளோடும் இணைந்தும் பாஜக ஆட்சிபுரியும் சூழலில், பாஜகவினர் மீதான பணமோசடி குற்றச்சாட்டுக்கள் மட்டும் சஞ்சய் குமார் மிஸ்ராவின் புலனாய்வுக் கண்களுக்கு எட்டாமலேயே போய்விட்டன. அதனால்தான் சஞ்சய் குமார் மிஸ்ராவை வீட்டுக்கு அனுப்ப மனமில்லாமல் அமித் ஷா பதறுகிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

ஆனால் சஞ்சய் குமார் மிஸ்ரா அமலாக்கத்துறை இயக்குநராக பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் நிலைமை இப்படி ஆகிவிட்டது என்று எடுத்துக்கொள்ள முடியாது. இவர் பாஜகவின் எண்ணத்திற்கேற்ப பணிகளை விரைவுபடுத்தியிருக்கிறார் என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். 2004 முதல் 2014 வரையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தையும், 2014 முதல் 2022 வரையிலான பாஜக ஆட்சிக்காலத்தையும் ஒப்பிடும்போது அமலாக்கத்துறையை பாஜக எவ்வளவு மோசமாக கையாண்டு, ஜனநாயகத்தை சீர்குலைத்திருக்கிறது என்பதை விளக்கமாகத் தெரிந்துகொள்ளலாம்.

2005ஆம் ஆண்டில் இருந்து இதுவரை சுமார் 6,000 வழக்குகள் அமலாக்கத்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 1,142 வழக்குகளுக்கு மட்டும்தான் முழுமையாக விசாரணை முடிக்கப்பட்டு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 25 வழக்குகள் மட்டும்தான் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

2004-இல் இருந்து 2014 வரைக்கும் காங்கிரஸ் ஆட்சியில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்ததை விட, 2014-இல் இருந்து 2022 வரை பாஜக ஆட்சியில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது 2,555 % அதிகம். 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 112 இடங்களில் மட்டுமே அமலாக்கத்துறை சோதனை நடத்தியிருந்தது. ஆனால் பாஜக ஆட்சியில் 2014 முதல் 2022 வரை சுமார் 3,000 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை செய்திருக்கிறது. 2014 முதல் 2022 வரை அரசியல் தலைவர்கள், நிர்வாகிகள் 115 பேருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியுள்ளது. அதில் 95 % எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்களே.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 24 பேர், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 19 பேர், தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 11 பேர், சிவசேனாவை சேர்ந்த 8 பேர், திமுக மற்றும் பிஜு ஜனதா தளம் கட்சிகளை சேர்ந்த தலா 6 பேர், ராஷ்டிரிய ஜனதா தளம், பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி, தெலுங்குதேசம் கட்சிகளைச் சேர்ந்த தலா 5 பேர், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 3 பேர் கடந்த 9 ஆண்டுகளாக அமலாக்கத்துறை கண்காணிப்பில் உள்ளனர். முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஒட்டுமொத்த 10 ஆண்டுகளிலும் சேர்த்தே 26 அரசியல் தலைவர்கள் வீடுகளில் மட்டும்தான் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அதில் 14 பேர் மட்டும்தான் எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள். 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மாநிலங்களவையில் ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுதரி அளித்த பதில் மூலம் இப்புள்ளி விவரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பாரதிய ஜனதா கட்சிக்கு ஊழல் ஒழிப்பில் அக்கறை இல்லை, எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதுதான் முக்கியம் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன. பாஜகவில் இணைந்துவிட்டாலே, எவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளும் ஒழிந்து புனிதர்கள் ஆகிவிடும் அதிசயமும் கடந்த 9 ஆண்டுகளில் பலமுறை நடந்திருக்கிறது. சோதனைக்குப் பிறகோ, சோதனை நடத்தக்கூடும் என்று அஞ்சியோ பாஜகவில் இணைந்த சம்பவங்களும் உள்ளன. தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைக்க முன்வந்த அஜித் பவார் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு பாவ மன்னிப்பு பெற்றுவிட்டார். சோதனைகளுக்கு பயந்துதான் ஏக்நாத் ஷிண்டே சிவசேனாவை உடைத்துக்கொண்டு பாஜகவுடன் கூட்டு வைத்துக்கொண்டார். இன்று சிவசேனா கட்சியையே தாக்கரே குடும்பத்திடம் இருந்து பிடுங்கி ஏக்நாத் ஷிண்டேவிடம் கொடுத்துவிட்டார்கள். பாஜகவில் இணைந்த பிறகு சோதனை குறித்து பயமே இல்லை என்று சிலர் வெளிப்படையாக பத்திரிகையாளர்களிடமே சொன்னார்கள்.

கடந்த 9 ஆண்டுகளில் நாடு முழுவதும் 270-க்கும் அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் பாஜகவிற்கு தாவியுள்ளனர். இவர்களை பாஜகவில் இணைப்பதற்காக அக்கட்சி சுமார் 2,000 கோடி ரூபாய் முதல் 3,000 கோடி ரூபாய் வரை செலவிட்டிருக்கிறது என்று ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார். ஆனால் இன்றுவரை பாஜக தரப்பு அக்குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கவில்லை. பெரு நிறுவனங்களிடம் இருந்து பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் பணத்தை வாரிச் சுருட்டுவதற்காக, தேர்தல் பத்திரங்கள் என்னும் மோசடி முறையை சட்டப்பூர்வமாக்கிய கட்சி பாஜக.

கர்நாடகாவில் பசவராஜ் பொம்மை தலைமையிலான முந்தைய பாஜக ஆட்சியில் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என எல்லா மட்டங்களிலும் ஊழல் தலைவிரித்தாடியது. தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பாலியல் என பாஜகவினர் கடந்த 6 மாதங்களில் சிக்காத வழக்குகளே இல்லை. ஆருத்ரா நிறுவனத்தின் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மோசடியில் கூட பாஜகவில் இருந்தவர்கள் சிக்கியிருக்கிறார்கள். அண்ணாமலையோடு நெருக்கமாக இருந்த நடிகர் ஆர்.கே.சுரேஷ், ஆருத்ரா வழக்குக்கு அஞ்சி எந்த நாட்டில் தலைமறைவாகியிருக்கிறார் என்றே தெரியவில்லை.

ஆனால் பாஜகவினர் மீதான பணமோசடி குற்றச்சாட்டுக்களோ, ஊழல் குற்றச்சாட்டுக்களோ விசாரணை அமைப்புகளுக்கு தெரிவதே இல்லை. சஞ்சய்குமார் மிஸ்ராக்களுக்குஎதிர்க்கட்சிகள்மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றன. எதிர்க்கட்சியினர் மீதான குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதெல்லாம் வேறு கதை. ஆனால் அரசியலுக்காக ஒன்றிய பாஜக அரசு பழிவாங்குகிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் உணர்த்துகின்றன. ஒருவேளை எதிர்க்கட்சியினர் வீடுகளில் சோதனை நடந்தது போல, கைது நடவடிக்கைகள் நடந்ததைப் போல பாஜகவினர் வீடுகளிலும் நடந்திருக்கிறது என குறைந்தபட்சம் 10 பேரையாவது அவர்களால் சொல்ல முடியுமா? நிச்சயம் முடியாது. தன்னாட்சி அமைப்புகளின் முதுகுத்தண்டை நொடித்து, ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்குகிறது பாஜக.

ஒரே நாடு, ஒரே கட்சி, ஒரே ஆட்சி அதுதான் ராமராஜ்ஜியம், அந்த கனவை நோக்கி பாஜக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு விசாரணை அமைப்புகள், தேர்தல் ஆணையம், வாய்ப்புள்ள இடங்களில் நீதித்துறையையும் கூட பயன்படுத்திக்கொள்கிறது. ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் சித்தாந்தங்களில் ஊறித் திளைத்தவர்களை அதிகார மையங்களில் நிரப்பி, தங்களுக்கு வேண்டியவற்றை சாதித்துக் கொள்கிறது. அதனால்தான் சஞ்சய் குமார் மிஸ்ராவை உச்சநீதிமன்றம் வீட்டுக்கு அனுப்பிவைக்க சொன்னதை அமித் ஷா-வால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பாசிச பாஜகவை வீழ்த்துவது ஒன்றே மக்களுக்கான உரிமைகளைத் தக்க வைக்கும், மக்களுக்கான உரிமைகளுக்காக போராடுபவர்களையும் தக்க வைக்கும். ஊழல்தான் பிரச்னை என்றால் கூட, அதிலும் பாஜகவை விட மிகப்பெரிய ஊழல் கட்சி இந்த நாட்டில் இருக்காது. ஊழலை சட்டப்பூர்வமாகச் செய்யும் கட்சி பாஜக. பாஜகவின் ஊழல் ஒழிப்பு என்பது அப்பட்டமான அரசியல் பழிவாங்கலாக மட்டுமே இருக்கிறது.

## வாலாஜா வல்லவனின் உரை; கடந்த இதழின் தொடர்ச்சி!

# தேவதாசி முறை - ‘மனுநீதி’ சனாதனங்களை எதிர்த்தது திராவிடம்

நீங்கள் நான்கு வருணங்களாக பிரித்து வைத்தீர்கள், ஊருக்கு வெளியே தான் குடியிருக்க வேண்டும், நல்ல நகை போடக்கூடாது, சூத்திரர்கள், மேல் ஜாதிக்காரர்கள் பயன்படுத்திய பழைய ஆடைகளைத் தான் உடுத்த வேண்டும், ஈய பாத்திரம் தான் பயன்படுத்த வேண்டும், பொன் வெள்ளி நகைகளை அணியக்கூடாது என்று துரத்திய மக்களை ஊருக்குள் அழைத்து சமத்துவபுரம் கட்டிக் கொடுத்தவர் தான் கலைஞர், இதுதான் திராவிடம். மேற்கூறியவை சனாதனம், அதற்கு எதிரானது தான் திராவிடம்.

ராஜராஜ சோழன் காலத்தில் இருந்து நீங்கள் தேவதாசி முறையை கொண்டு வந்தீர்கள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் மசோதா காரணமாக 1929 இல் தேவதாசி முறையை ஒழித்துக் கட்டியது எங்கள் திராவிடம். சனாதனத்திற்கு நேர் எதிரானது திராவிடம், ‘எதைக் கொடுத்தாலும் கொடு ஆனால் சூத்திரனுக்கு கல்வியை மட்டும் கொடுக்காதே என்கிறது மனுநீதி’, அதற்கு நேர் எதிராக சென்னை மாகாணத்தில் 1922 முதல் 1926 க்குள் பனகல் அரசர் ஆட்சியில் 12250 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. காமராஜர் பள்ளிக்கூடங்களை திறந்தார் என்பது உண்மை ஆனால் அதற்கு முன்பே பனகல் அரசர் 500 மக்கள் வாழ்கிற பகுதியில் ஒரு பள்ளி என்று கொண்டு வந்தார். காமராஜர் ஆட்சியின் 300 பேர் வாழ்கிற பகுதியில் ஒரு பள்ளி என்று கொண்டு வந்தார். 1920 களிலேயே கட்டாய கல்வி சட்டத்தை கொண்டு வந்தது நீதிக்கட்சி என்பது வரலாறு. தெரியாத காரணத்தினால் தான் திராவிடம் என்ன செய்தது என்று சிலர் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவம், புலவர், பண்டிட் படிப்புகளுக்கு சமஸ்கிருதம் கட்டாயம் என்ற நிலை இருந்தது. பனகல் அரசர் ஆட்சி காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த ஏ.பி. பாத்ரோ சொன்னார், எதற்காக சமஸ்கிருதம் கட்டாயமாக இருக்க வேண்டும், இதற்கு திராவிட அரசு திராவிட மொழிகளுக்கு மட்டும் தான் செலவழிக்கும், 1924 இல் சட்டமன்றத்தில் பேசியதோடு நிற்காமல் அரசாணை பிறப்பித்தார் பனகல் அரசர்.



அதன் பிறகு தான் பார்ப்பனர்கள் சென்னை பல்கலைக்கழக சிண்டிகேட்டில் சமஸ்கிருதம் தெரியாவிட்டாலும் பரவாயில்லை தமிழை தனியாக படித்து பண்டிட் ஆகலாம் என்று ஒப்புக்கொண்டனர். 1926 இல் தான் முதல் முறையாக சமஸ்கிருதம் தெரியாமல் தமிழ் படிக்கிற வாய்ப்பு வந்தது, எதை எடுத்தாலும் சமஸ்கிருதம், எதற்காக அப்படி வைக்கிறார்கள் பார்ப்பனர்கள் மட்டுமே தமிழ் ஆசிரியர்களாக வரவேண்டும், பார்ப்பனர்கள் மட்டுமே வரலாற்று ஆசிரியர்களாக வர வேண்டும், பார்ப்பான் மட்டுமே பொறியியல் மருத்துவம் எல்லாவற்றிலும் ஆசிரியராக இருக்க வேண்டும். சமஸ்கிருதம் தெரியாமல் மருத்துவம் படிக்க கூடாது என்ற ஒரு விதி இருந்தது, அதற்கு நேரடி சாட்சி கிஆபெ. விஸ்வநாதன் என்றார் வாலாஜா வல்லவன்.

**மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவை எனும் சனாதனத்தை பனகல் அரசர் எப்படி நிறுத்தினார்?**

1925-இல் நீதிக்கட்சியில் இருந்த கிஆபெ விஸ்வநாதன் திருச்சி நகர நீதிக்கட்சி தலைவர் மகனை உடன் அழைத்துச் சென்று முதன்முதலில் பனகல் அரசரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார். நல்ல மதிப்பெண் பெற்றிருந்தும் கூட நீதிக்கட்சியின் தலைவர் மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காததை சுட்டிக்காட்டினார்.

உடனே பனகல் அரசர் மருத்துவக் கல்லூரி அதிகாரியை தனது அறைக்கு அழைத்து விவரம் கேட்கிறார். அந்த மாணவருக்கு சமஸ்கிருதம் தெரியவில்லை, அதனால் தான் இடம் கிடைக்கவில்லை என்று அதிகாரி விளக்கம் தருகிறார். அப்படி ஏதும் சட்டம் இருக்கிறதா என்று பனகல் அரசர் கேட்க, சட்டம் ஏதுமில்லை அது மரபாகத்தான் பின்பற்றப்படுகிறது என்று அந்த அதிகாரி கூறுகிறார். அத்தகைய மரபுகள் தேவையில்லை, அதை பின்பற்ற வேண்டாம் என்று பனகல் அரசர் கூற மாணவருக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. இந்த தகவல் முத்தமிழ்காவலர் கி.ஆ.பெ விஸ்வநாதன் வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. இந்த வரலாற்று நூலை எழுதியவர், பிரபல எழுத்தாளர் முகம் மாமணி. சனாதனத்தின் சதியை திராவிடம் எப்படி முறியடித்தது என்பதற்கு இதுவே நல்ல உதாரணம்.


வாலாஜா வல்லவன் உரையில் இருந்து.

# ‘ராஜாஜி’க்கு ‘மூக்காஜீ’ பதிலடி

74. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பார்ப்பனர் ஹெச். வி.ஹண்டே இது மூன்றாம் தர ஆட்சி என்று திமுகவை சாடிய போது முதல்வராக இருந்த கலைஞர் எழுந்து அதற்கு பதிலடி தந்தார். “இது மூன்றாம் தர ஆட்சி அல்ல, நான்காம் தர ஆட்சி, சூத்திரர்களால் சூத்திரர்களுக்காக ஆளப்படும் ஆட்சி” என்று பதிலடி தந்து சட்டப்பேரவை குறிப்பிலும் அதை பதிவேற்ற வைத்தார்.

75. இட ஒதுக்கீடு அமல்படுத்துவதால் உயர் சாதியினர் பாதிக்கப்படுகிறார்கள் என்று எதிர்ப்பு எழும்பிய போது கலைஞர் அதற்கு ஒரு உதாரணத்துடன் பதில் அளித்தார். சலவை செய்து அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்ட துணிகளுக்கு மீண்டும் சலவை செய்ய தேவையில்லை, அழுக்காகி கிடைக்கும் துணிகளுக்குத் தான் சலவை செய்ய வேண்டும் என்று பதில் அளித்தார்.

76. சாலையில் தார் ஊற்றி கொளுத்தும் வெயிலில் வேலை செய்யும் தொழிலாளிகளின் அவலம் கலைஞரின் கண்ணில் தான் பட்டது. நேரில் கண்ட அவர் காலில் சாக்கு துணியை கட்டிக் கொண்டு தார் போட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு ஜாக் பூட், முழங்கால் வரையிலான காலனி, கையுறைகள் வழங்கவும் ஆணையிட்டவர் கலைஞர்.



77. 1954-இல் அரசியலை விட்டு விலகப் போகிறேன் என்று அறிவித்த ராஜாஜி, இராமாயணத்திற்கு கல்கி ஏட்டில் விரிவுரை எழுத தொடங்கினார். சக்கரவர்த்தி திருமகன் என்று அதற்கு பெயர் சூட்டினார். அறிவிப்பை கண்ட கலைஞர் உடனே முரசொலியில் சக்கரவர்த்தி திருமகனுக்கு பதிலடியாக சக்கரவர்த்தியின் திருமகன் கட்டுரை தொடர் முரசொலியில் வெளிவரும் என்று அறிவித்தார்.ராஜாஜிக்கு சக்கரவர்த்தி என்ற பட்ட பெயரும் உண்டு. ராஜாஜி எழுதியதால் அதற்கு பதிலடியாக ‘மு.க ஜீ’ என்ற பெயரில் அந்த கட்டுரைத் தொடரை கலைஞர் எழுதினார்.

78. இராமாயணம் நூலுக்கு மறுப்பாக பரதாயணம் என்று தலைப்பிட்டு பரதன் ஆட்சி நடத்திய காலத்தில் பார்ப்பனர்கள் எப்படி மகிழ்விக்கப்பட்டார்கள் என்பதையும் மீண்டும் ராமன் ஆட்சிக்கு வந்த பிறகு சூத்திரன் சம்பூகனை அவன் வெட்டி சாய்த்ததையும் கலைஞர் பதிவு செய்தார்.

79. ராஜாஜிக்கு பதிலடி தந்த மூக்காஜீ-யின் கட்டுரை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அப்போது ராஜாஜியை காப்பாற்றுவதற்கு அவரது சீடர் மபொசி களத்தில் இறங்கினார், மபொசிக்கு கலைஞர் பதிலடி கொடுத்தார். ‘விபீசணருக்கு விடையளிப்போம்’ என்ற தலைப்பில் மபொசியின் ராமாயண ஆதரவு கட்டுரையை மறுத்தார்.

80. டெல்லியிலே ஒவ்வொரு ஆண்டும் ராம லீலா என்ற பெயரில் ராவணன் உருவங்களை எரிக்கும் மதவெறி நிகழ்வுகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார் கலைஞர். தென்னாட்டிலும் ராமனை எரிக்கும் ராவண லீலாக்கள் நடத்தும் காலம் வந்தே தீரும் என்று முரசொலியில் போர்ச்சங்கு ஊதினார். பெரியார் திராவிடர் கழகம் 1996 இல் தொடங்கப்பட்ட காலத்தில் சில ஆண்டுகள் இராவண லீலாக்களை நடத்தியது, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் கூப்பாடு போட்டார்கள். முதல்வராக இருந்த கலைஞர் ஒவ்வொரு இராவண லீலா நிகழ்வின் போதும் பார்ப்பன எதிர்ப்புகளை புறந்தள்ளி காலையில் கைது செய்து மாலையில் வீட்டுக்கு தோழர்களை அனுப்பி வைத்தார்.

81. கலைஞர் எழுதிய பராசக்தி படத்தைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி நாடு முழுதும் கண்டனக் கூட்டங்களை நடத்தியது. தினமணி பத்திரிக்கை கிண்டல் செய்து கேலிச்சித்திரம் ஒன்றை வெளியிட்டது, அதில் கதை, வசவு, தயாநிதி என்று எழுதப்பட்டு பரபிரம்மம் என்று தலைப்பிட்டது, கலைஞர் அதே பரப்பிரம்மம் என்ற தலைப்பை வைத்து ஒரு நாடகத்தை எழுதி பல ஊர்களில் நடித்துக் காட்டினார்.

82. மனோகரா திரைப்படத்திற்கு வசனம் எழுதினார் கலைஞர், கதையில் வரும் பேய் பிசாசு கருத்துக்களை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார். அதற்கு பதிலாக அதிசய மருந்து சாப்பிடுவதால் உருவம் மறைந்து கொண்டே வருவது போல் கதையை மாற்றி அமைத்தார்.

83. ராஜா ராணி திரைப்படத்தில் அகல்யா கதை, சேரன் செங்குட்டுவன், சாக்ரடீஸ் விஷம் கொடுத்து கொல்லப்பட்ட வரலாறுகளை நாடகங்களாக இணைத்து பகுத்தறிவு கருத்துக்களை பரப்பினார்.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சனாதனத்தை தோலுரிக்கிறார்கள் கழகத் தோழர்கள்!

**முதல் பக்க தொடர்ச்சி**

என்ன செய்தது என விளக்கினர். அதைத்தொடர்ந்து நங்கவள்ளி அன்பு எது சனாதனம்? எது திராவிடம்? எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இறுதியாக செல்வமணி நன்றியுரை கூறி கூட்டம் நிறைவடைந்தது. இளம்பிள்ளை கோபி, வெற்றி முருகன் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

15.07.23 காமராசர் பிறந்த நாளில் மாலை 6.30 மணியளவில் சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவலாண்டியூர் கிளைக்கழக சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனை பரப்புரை தொடக்கக் கூட்டம் கண்ணாமூச்சியில் நடைபெற்றது.

இக்கூட்டம் மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது. மாரி வரவேற்புரையாற்ற கொளத்தூர் தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ம.மிதுன் சக்ரவர்த்தி தலைமையேற்று உரையாற்றினார். சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, அ.முருகேசன் தி.மு.க கண்ணாமூச்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து சதாசிவம் தி.மு.க. மாவட்ட மாணவரணி பொருப்பாளர், சேட்டுகுமார் கொளத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் வி.சி.க, சிவக்குமார் சட்டமன்ற தொகுதி செயலாளர் வி.சி.க, கிருஷ்ணன் நல்லம்பள்ளி ஒன்றியம் வி.சி.க, சித்துசாமி தி.வி.க, நாத்திகசோதி ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் தி.வி.க, கோனூர் வைரமணி மாவட்ட இலக்கிய அணித்தலைவர், தலைமைக்கழக பேச்சாளர் தி.மு.க, எது சனாதனம்? எது திராவிடம்? குறித்து சிறப்புரையாற்றினார்கள். காவை ஈசுவரன் கழக தலைமைக்குழு உறுப்பினர், கூட்டத்தை தொகுத்து வழங்கினார்.

தங்கராசு கிளைச் செயலாளர் நன்றியுரை கூற கூட்டம் முடிவுற்றது.

அ.முருகேசன் தி.மு.க கண்ணாமூச்சி, அனைவருக்கும் அசைவ உணவு ஏற்பாடு செய்திருந்தார். கொளத்தூர் விஜி, சசிகுமார், கண்ணையன், காவை இளவரசன், அபிமன்யு, பழனிசாமி, சென்னப்பன், இளவரசன், பச்சியப்பன், சந்திரன், பரமேஸ், சேகர், கொளத்தூர் குமார், மேட்டூர் அண்ணாதுரை, குமரப்பா, முத்துராஜ், சீனிவாசன், மேட்டூர் ஆர்.எஸ். நாகராஜ், நங்கவள்ளி கிருஷ்ணன், அருள், பிரபாகரன் கலந்துகொண்டனர். மற்றும் தி.மு.க,ல் வி.சி.க பொறுப்பாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

15/07/2023 அன்று இளம்பிள்ளை கழகம் சார்பாக தெருமுனை கூட்டம் மகுடஞ்சாவடியில் மாலை 4 மணிக்கு மற்றும் பெருமாகவுண்டம்பட்டியில் மாலை 6 மணிக்கும் இன்று மாலை நடைபெற்றது. முத்துமாணிக்கம் தலைமையேற்க, தங்கதுரை முன்னிலை வகித்தார்.

கூட்டத்தின் நோக்கம் குறித்து மோகன்ராஜ், திவ்யா கோபி, தமிழ்நாடு மாணவர் கழக செல்வா ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து ஆத்தூர் மகேந்திரன் மந்திரம் அல்ல தந்திரமே எனும் அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடத்தி உரையாற்றினார். கோபி நன்றி உரையாற்றினார்.

சேலம் கிழக்கு மாவட்டம், இளம்பிள்ளை கிளைக் கழக சார்பில் 16.07.2023 ஞாயிறு மாலை 4 மணியிலுருந்து 6 மணி வரை சின்னப்பப்பட்டி பகுதியிலும் இரண்டாவது கூட்டம் இரவு 7 மணியிலிருந்து 9 மணி வரை தாரமங்கலம் அண்ணா சிலை அருகிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை தலைமையேற்றார். மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் முன்னிலை வகித்தார். ஆத்தூர் மகேந்திரனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்வு நடைபெற்றது.

இளம்பிள்ளை திவ்யா, இளம்பிள்ளை மோகன்ராஜ், செல்வகுமார் தமிழ்நாடு மாணவர் கழகம் ஆகியோர் கலந்து கொண்டு எது திராவிடம்? எது சனாதனம்? என்பதை விளக்கி மக்களுக்கு எடுத்துரைத்தனர். இளம்பிள்ளை கோபி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கவியரசு நன்றியுரை கூற கூட்டம் முடிவுற்றது.

தாரமங்கலம் பகுதி குடந்தை பாலன், தமிழரசன் மேச்சேரி, இளம்பிள்ளை பகுதி ரமேஷ், தமிழ்மணி, சேகர், ரவி, தமிழ், நிலா, நங்கவள்ளி பகுதி கிருஷ்ணன், பிரபாகரன், ஆர்.எஸ். பகுதி நாகராஜ், கொங்கனாபுரம் கவியரசு, பொட்டனேரி பகுதி ரவிக்குமார் ஆகிய பலர் இதில் கலந்துகொண்டனர். கடும் மழையையும் பொருட்படுத்தாமல் தோழர்கள் இடைவிடாது இன்றைய தெருமுனைக் கூட்டத்தை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தனர்.

ஈரோடு தெற்கு 15.07.2023 ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக மணக்காட்டூரில் கர்ம வீரர் காமராசரின் 121-வது பிறந்தநாள் விழா மற்றும் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனை கூட்டம் மாவட்ட செயலாளர் எழிலன் தலைமையில் தொடங்கியது.

இக்கூட்டத்தில் அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், திராவிட மாடல் , திராவிடர் விடுதலைக் கழகத்தின் பயணங்கள் , கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட காணொளி ஒளிபரப்பப்பட்டது. பொதுமக்கள் காணொளியை ஆர்வத்தோடு பார்வையிட்டனர்.

மாவட்ட இளைஞரணி செயலாளர் பேரன்பு கொள்கைப் பாடல்கள் பாடினார், கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி எது சனாதனம்? எது திராவிடம்? குறித்து சிறப்புரையாற்றினார். கோகுல், கோபிநாத், பழனிசாமி,குமார்,பிரபு, திராவிடர் இயக்க தமிழர் பேரவை தோழர் சரவணன், சு.ச.க. பாண்டியன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்..

இரண்டாம் நாளாக 16.07.2023 ஞாயிறு அன்று பெருமாள் மலையில் இராசண்ணா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் எழிலன், கிருஷ்ணமூர்த்தி, பழனிசாமி, புரட்சிகர இளைஞர் முன்னணி அற்புதராஜ் ஆகியோர் உரையாற்றினர். கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி சிறப்புரையாற்றினார்.

இறுதியாக அம்பேத்கர், பெரியார், திராவிட மாடல், தி.வி.க. கடந்துவந்த பாதை, கழகத் தலைவரின் எது சனாதனம்? எது திராவிடம்? விளக்க காணொளிகள் ஒளிபரப்பப்பட்டது. சி.எம்.நகர் பிரபு, திருமுருகன், விஜயரத்தினம், முருகன் ரங்கம்பாளையம் பிரபு, அழகு ஆகிய தோழர்கள் கலந்துகொண்டனர்.

**தஞ்சாவூர் :** தஞ்சை மாநகர கழகம் சார்பாக எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டம் தஞ்சை கீழவாசல் பகுதியில் சண். பாண்டியநாதன் தலைமையில் நடைபெற்றது.

பரப்புரையில் குடந்தை ஒன்றிய கழக அமைப்பாளர் வெங்கடேசன், ரோலர் பாரி, திராவிட இயக்க தமிழர் பேரவை மாநில அமைப்பாளர் காசு. நாகராசன் சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது இடமாக தஞ்சை சிவகங்கை பூங்கா அருகில் நடைபெற்ற பரப்புரையில் தஞ்சை மாவட்ட கழக அமைப்பாளர் திருவேங்கடம் துவக்க உரையாற்றினார். தொடர்ந்து தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழவன், காசு நாகராசன் உரையாற்றினார்கள்.

மூன்றாவது இடமாக தஞ்சை ரயிலடி அருகே நடைபெற்ற பரப்புரையில் தமிழ்நாடு மாணவர் கழக பொள்ளாச்சி சபரி கிரி அவர்கள் துவக்கவுரையாற்றினர். கோவை மாவட்ட கழக செயலாளர் வெள்ளிங்கிரி, காசு நாகராசன் சிறப்புரையாற்றினார். ஒரத்தநாடு ஒன்றிய கழக செயலாளர் சிவசுப்பிரமணியன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

நாச்சியார் கோவில் கழகத் தோழர்கள் சோலை மாரியப்பன், ஆனைமலை ஆனந்த், மணி, நடராசன், கௌதமன் திராவிடர் இயக்க தமிழர் பேரவை சார்பாக கலந்து கொண்டனர்.

---

## பட்டியல் தயாரிப்பு ; வழிகாட்டுகிறது திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 9.7.2023 அன்றுகாலை 10 மணியளவில் பழனியில் உள்ள பூம்புகார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமை வகித்தார், மாவட்ட அமைப்பாளர் மருத மூர்த்தி முன்னிலை வகித்தார். கழகப் பொருளாளர் திருப்பூர்.துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் செயற்குழு உறுப்பினர் இரா.உமாபதி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பில் “வைக்கம் போர் இன்னும் முடியவில்லை” என்கிற தலைப்பில் சேகரிக்கப்பட்ட ஜாதித் தீண்டாமை குறித்த புள்ளி விவரங்கள் அடங்கிய பட்டியலை தலைமைக் குழு உறுப்பினர்களிடம் ஒப்படைத்தனர்.பட்டியல் தயாரிப்புக்கு தனிப் படிவங்களை அச்சிட்டு நூறு கிராமங்களுக்கு மேள் நேரில் சென்று தீண்டாமைக் கொடுமைகளை திரட்டியுள்ளனர்.

1. எது திராவிடம்? எது சனாதனம்? என்னும் தலைப்பில் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் 50 தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது.

2 ஐம்பது புரட்சிபெரியார் முழக்கம் இதழுக்கு ஒரு மாதத்திற்குள் சந்தா சேர்த்து தலைமைக்கு அனுப்புவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : July 21, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran